விநாயகர் கோயில்களில் வருஷாபிஷேகம்

பழனி, மார்ச் 25: பழனி கோயில் கட்டுப்பாட்டின் கீழுள்ள 5 விநாயகர் கோயில்களில் செவ்வாய்க்கிழமை வருஷாபிஷேகங்கள் நடைபெற்றன.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கட்டுப்பாட்டில் திரளான சிறிய கோயில்கள் உள்ளன. இந்தக் கோயில்களில் அவ்வப்போது கோயில் பணிகள் நடத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், பழனி கிரிவீதியில் உள்ள நின்ற விநாயகர் கோயில், ராக்கால விநாயகர் கோயில், தலைவலி தீர்க்கும் விநாயகர் கோயில், ரோப்கார் விநாயகர் கோயில், சரவணப்பொய்கை விநாயகர் கோயில்களில் குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு, செவ்வாய்க்கிழமை வருஷாபிஷேகங்கள் நடைபெற்றன.

இந்தக் கோயில்களில் காலை முதல் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு, சிவாசார்யர்கள் யாகம் வளர்த்தனர். யாக நிறைவில் பூர்ணாஹுதி நடத்தப்பட்டு, கலச தீர்த்தங்கள் கோயிலை வலம் வர செய்யப்பட்டன. பின்னர், உச்சிக்காலத்தின் போது விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பழனி கோயில் நிர்வாகம் சார்பில் அதிகாரிகள், அலுவலர்கள் செய்தனர்.

கொலை முயற்சி வழக்கு: தம்பதிக்கு சிறை

திண்டுக்கல், மார்ச் 25: விவசாயியை கொலை முயற்சி செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட தம்பதிக்கு சிறைத் தண்டனையும், அபராதமும் விதித்து திண்டுக்கல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

திண்டுக்கல் மாவட்டம், விருவீடு அருகேயுள்ள சென்மார்பட்டியைச் சேர்ந்தவர் வனராஜா (40). விவசாயியான இவரை சொத்துப் பிரச்னை காரணமாக, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு, மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சேர்ந்த ராஜேஷ் (35), இவரது மனைவி நித்யா (33) ஆகியோர் சேர்ந்து அரிவாளால் வெட்டி, பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொலை செய்ய முயற்சி செய்தனர்.

இதுகுறித்து விருவீடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து ராஜேஷ், நித்யா ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திண்டுக்கல் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணை முடிவடைந்த நிலையில், மாவட்ட முதன்மை நீதிபதி ஏ. முத்து சாரதா செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார். இதில் கொலை முயற்சியில் ஈடுபட்ட ராஜேஷுக்கு 8 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.6 ஆயிரம் அபராதமும், நித்யாவுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.11,500 அபராதமும் விதித்தார்.

இளைஞர் தற்கொலை

பழனி, மார்ச் 25: பழனியில் திங்கள்கிழமை இளைஞர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஜவகர் நகரைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் சுரேஷ் (19). தனியார் நிறுவன ஊழியரான இவர், கடந்த சில நாள்களாக மன உளைச்சலில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், சுரேஷ் திங்கள்கிழமை இரவு வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து பழனி டவுன் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தொழிலாளி தற்கொலை: பழனி அருகேயுள்ள பெத்தநாயக்கன்பட்டியைச் சேர்ந்தவர் மாரிமுத்து (46). கூலித் தொழிலாளியான இவர், கடந்த சில நாள்களாக குடும்பத் தகராறு காரணமாக, மன உளைச்சலில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் இவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து பழனி தாலுகா போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்தவர் கைது

தேனி, மார்ச் 25: தேனி அருகே சாலையில் நின்றிருந்தவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்தவரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தேனி அல்லிநகரம், வீரப்பஅய்யனார் கோவில் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணசாமி மகன் சரவணக்குமார் (23). இவர், தனது நண்பர் கௌதம் உடன் ரத்தினம் நகர்-சுக்குவாடன்பட்டி சாலையில் உள்ள அரசு மதுக் கடைக்குச் சென்றார்.

கௌதமை மது புட்டி வாங்குவதற்கு அனுப்பி விட்டு, சரணவக்குமார் மதுக் கடை சாலையில் நின்றிருந்தாராம். அப்போது, பெரியகுளம் அருகேயுள்ள சருத்துப்பட்டியைச் சேர்ந்த கண்ணையன் மகன் விஜய் (34), கத்தியைக் காட்டி மிரட்டி, சரவணக்குமாரிடம் ரூ.400-யை பறித்துக் கொண்டு தப்பி ஓடி விட்டதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து அல்லிநகரம் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விஜயை கைது செய்தனர்.

தீயணைப்பு நிலையக் கட்டடத்தை சீரமைக்க வலியுறுத்தல்

தேனி, மார்ச் 25: தேனியில் சிதிலமடைந்த நிலையில் உள்ள தீயணைப்பு நிலையக் கட்டடத்தைச் சீரமைத்து தர வலியுறுத்தி, இந்து எழுச்சி முன்னணி சார்பில், தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்கிடம் செவ்வாய்க்கிழமை மனு அளிக்கப்பட்டது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இந்து எழுச்சி முன்னணி தேனி நகர அமைப்பாளர் கனகுபாண்டி, நிர்வாகிகள் ஆட்சியரிடம் அளித்த மனு விவரம்:

தேனியில் பெரியகுளம் சாலையில் கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேல் சிதிலமடைந்த கட்டடத்தில் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தைச் சீரமைத்து, பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும். மேலும், புதிய நவீன தொழில்நுட்ப தீயணைப்பு, மீட்புப் பணிகளுக்கான உபகரணங்கள், புதிய வாகனம் வழங்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் தெரிவித்தனர்.

குறிஞ்சி மாரியம்மன் கோயில் திருவிழா: பால் குடம் எடுத்து வந்த பக்தர்கள்

கொடைக்கானல், மார்ச் 25: கொடைக்கானல் குறிஞ்சி மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு, பால் குட ஊர்வலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கொடைக்கானல் குறிஞ்சி நகர் பகுதியில் குறிஞ்சி மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் திருவிழா கடந்த 10 நாள்களாக நடைபெற்று வருகிறது. செவ்வாய்க்கிழமை அம்மனுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது. பின்னர், கொடைக்கானல் போக்குவரத்து பணிமனை பகுதியிலுள்ள காளியம்மன் கோயிலிருந்து பக்தர்கள் பால் குடம் எடுத்து ஊர்வலமாக வந்தனர். இந்த ஊர்வலம் ஏரிச்சாலை, நகராட்சி சாலை, செவண்ரோடு, அண்ணா சாலை, கே.சி.எஸ். திடல், மூஞ்சிக்கல், ஆனந்தகிரி வழியாக குறிஞ்சி மாரியம்மன் கோயிலை அடைந்தது. அங்கு அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பல்வேறு பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து, அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த விழாவுக்கான ஏற்பாடு விழாக் குழுவினர், பொதுமக்கள் செய்தனர்.

கொடைக்கானல் குறிஞ்சி மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பால் குட ஊர்வலத்தில் பங்கேற்ற பெண்கள்.

கொலை முயற்சி வழக்கு: இளைஞருக்கு 4 ஆண்டுகள் சிறை

உத்தமபாளையம், மார்ச் 25: கொலை முயற்சி வழக்கில் இளைஞருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, உத்தமபாளையம் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

தேனி மாவட்டம், கம்பம் உலகத்தேவர் தெருவைச் சேர்ந்த கோபால் மகன் சிவக்குமார் (35). அதே பகுதியைச் சேர்ந்த ராசு மகன் சதீஸ்குமார் (23).

கடந்த 15.10.2015 அன்று சதீஸ்குமார், இரு சக்கர வாகனத்தில் வேகமாகச் சென்றதை சிவக்குமார் தட்டிக்கேட்டார். அப்போது, ஏற்பட்ட தகராறில் சிவக்குமாரை கத்தியால் சதீஸ்குமார் குத்தினார்.

இதுதொடர்பாக கம்பம் வடக்கு போலீஸார் சதீஸ்குமார் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு விசாரணை உத்தமபாளையம் ஒருங்கிணைந்த உதவி அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சிவாஜி செல்லையா குற்றஞ்சாட்டப்பட்ட சதீஸ்குமாருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

பெண்களுக்கான சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

திண்டுக்கல், மார்ச் 25: திண்டுக்கல்லில் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கத்துக்கு ஆதவன் உலக செம்மொழி தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் மெர்சி தலைமை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அரசு வழக்குரைஞர் (மகளிர் நீதிமன்றம்) ஜோதி பேசியதாவது: குழந்தைகள், மாணவிகள், பெண்களுக்கான சட்டப் பாதுகாப்புகள் குறித்தும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், இதை எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும், பெண்கள், குழந்தைகளுக்கான உதவி மைய ஆலோசனைகள் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும், பெண்களுக்கான சொத்துரிமை, பணியிடங்களில் ஏற்படும் அச்சுறுத்தல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், இதிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டு வலிமையான பெண் சமுதாயத்தை உருவாக்குவதற்கு அனைவரும் துணை நிற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பைக் தீப்பிடித்து எரிந்ததில் சிறுவன் உள்பட 3 பேர் காயம்

நத்தம், மார்ச் 25: திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி அருகே செவ்வாய்க்கிழமை இரு சக்கர வாகனம் தீப்பிடித்து எரிந்ததில் சிறுவன் உள்பட 3 பேர் பலத்த காயமடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி அருகேயுள்ள கொரசினம்பட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் பத்மநாபன் (18). இதே பகுதியைச் சேர்ந்த ஆண்டிச்சாமி மகன் அலெக்ஸ் (17). பள்ளி மாணவர்களான இவர்கள், கொரசினம்பட்டியிலிருந்து இரு சக்கர வாகனத்தில் கோபால்பட்டிக்குச் சென்று நெகழிப் புட்டில் பெட்ரோல் வாங்கி கொண்டு வீடு திரும்பி வந்து கொண்டிருந்தனர். இரு சக்கர வாகனத்தை பத்மநாபன் ஓட்டினார். அலெக்ஸ் பின்னால் அமர்ந்திருந்தார். இவர்கள் நத்தம் கணவாய்பட்டி பங்களா அருகே வந்தபோது, அதே பகுதியைச் சேர்ந்த திருப்பதி மகன் நிபிலேஷ் (10) மீது இவர்கள் சென்ற இரு சக்கர வாகனம் மோதியது. இந்த விபத்தில் பெட்ரோல் புட்டி கீழே விழுந்து உராய்வு ஏற்பட்டதில் இரு சக்கர வாகனம் தீப்பிடித்தது. இந்த விபத்தில் பத்மநாபன், அலெக்ஸ், நிபிலேஷ் ஆகியோர் பலத்த காயமடைந்தனர். இதில் பத்மநாபன், அலெக்ஸ் திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலும், நிபிலேஷ் திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் அனுமதிப்பட்டனர்.

இதுகுறித்து சாணார்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர ஏப்.6-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், மார்ச் 25: தமிழகத்தில் 6 இடங்களிலுள்ள சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர தகுதியான கல்லூரி மாணவர்கள் வரும் ஏப்.6-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அலுவலர் இரா.சிவா தெரிவித்ததாவது: கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்காக, அறிவியல்பூர்வமான பயிற்சி, தங்குமிடவசதி, ஊட்டச்சத்து நிறைந்த உணவுடன் கூடிய சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 6 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

தடகளம், கால்பந்து, குத்துச்சண்டை, கைப்பந்து, ஜூடோ, வாள் விளையாட்டு, கையுந்துப் பந்து, பளுதூக்குதல், ஹாக்கி, கபடி, நடைப்பந்து ஆகிய விளையாட்டுகள் இருபாலருக்கும், மாணவிகளுக்கு ரஃக்பி விளையாட்டுக்கும் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

தகுதிகள்: 2025 ஜனவரி முதல் தேதியன்று 17 வயது நிரம்பிய 12-ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்று கல்லூரியில் இளநிலை முதலாம் ஆண்டு சேர்க்கை, முதுநிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவிகள் விளையாட்டு விடுதிகளில் சேரலாம். தனி நபர், குழு விளையாட்டுப் போட்டிகள், அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் 3 இடங்களில் வெற்றிப் பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள், இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு அல்லது இந்திய விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும், பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் கலந்து கொண்டவர்களும், பதக்கம் பெற்றவர்களும், மாநில அளவில் முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விளையாட்டு விடுதிகளில் சேர ஆர்வமுள்ளவர்கள், www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வரும் ஏப்ரல் 6-ஆம் தேதிக்குள் இணையவழியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் தகவல் பெற, ஆடுகள தகவல் தொடர்பு மையத்தை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் வரும் ஏப்.8-ஆம் தேதி காலை 7 மணிக்கு நடைபெறும். இதற்கான தகவல்கள், குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும்.

தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள்: சென்னை நேரு பூங்காவில் கபடி (இருபாலர்), எழும்பூர் எம்ஆர்கே. விளையாட்டு அரங்கில் ஹாக்கி (இருபாலர்) போட்டிகளும், இதர போட்டிகள் அனைத்தும் சென்னை பெரியமேடு ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கிலும் நடைபெறும்.

இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அலுவலரை 7401703504 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

டாஸ்மாக் கடையில் முதல்வர் படத்தை ஒட்ட முயற்சி: பாஜக நிர்வாகிகள் கைது

உத்தமபாளையம், மார்ச் 25: கம்பத்தில் டாஸ்மாக் கடையின் சுவரில் தமிழக முதல்வரின் உருவப் படத்தை ஒட்ட முயற்சித்த பாஜக நிர்வாகிகள் இருவரை போலீஸார் கைது செய்தனர்.

தேனி மாவட்டம், கம்பத்தில் புதிய பேருந்து நிலையம் அருகே டாஸ்மாக் கடை உள்ளது. இங்குள்ள சுவரில், டாஸ்மாக் ஊழலை கண்டித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவப் படத்தை பாஜக நகரச் செயலர்களான கோமதி, விஜிகலா ஆகியோர் ஒட்ட முயன்றனர்.

அப்போது, கம்பம் வடக்கு போலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி இருவரையும் கைது செய்தனர்.

போக்சோ வழக்கில் சகோதரர்களுக்கு ஆயுள் சிறை

திண்டுக்கல், மார்ச் 25: கூம்பூர் பகுதியைச் சேர்ந்த சகோதரர்களுக்கு போக்சோ வழக்கில் ஆயுள் சிறைத் தண்டனை விதித்து, திண்டுக்கல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரை அடுத்த கூம்பூர் பகுதியைச் சேர்ந்தவர் ரெங்கநாதன் (26). இவரது சகோதரர் கருப்புசாமி (31). இவர்கள் இருவரும், அதே பகுதியைச் சேர்ந்த 2 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன்பேரில், வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, ரெங்கநாதன், கருப்புசாமி இருவரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை திண்டுக்கல் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணை முடிவடைந்த நிலையில், நீதிபதி பி.வேல்முருகன் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார். இதில் பாலியல் குற்றத்தில் ஈடுபட்ட சகோதரர்கள் இருவருக்கும் ஆயுள் சிறைத் தண்டனையும், தலா ரூ.ஒரு லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

BRANCH SHIFTING

மதிப்பு மிக்க எமது வாடிக்கையாளர்களின் சிறப்பான வசதிக்காக, எங்களது **AYYALUR** கிளையானது 26.06.2025 முதல் கீழே தரப்பட்டுள்ள புதிய முகவரியிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

Muthoot Finance Ltd
Ground Floor, 14/K2,
Santhaipettai, Ayyalur,
Dindigul District,
Tamil Nadu, Pin - 624 001.
Phone No - 81389 25518, 91889 04415.
Email id - mgayy2039@muthootgroup.com

ஏதேனும் குறைகள் இருப்பின் 0484 4804074 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்

உங்களது ஆதரவையும் உதவியினையும் நாங்கள் தொடர்ந்து வரவேற்கிறோம்.

Muthoot Finance
A Muthoot M George Enterprise

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO-MDU/SN/159/2024-25 தேதி: 25.03.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 6(1) மற்றும் 6(2)-ன்படி அசையும் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர்.	2) திரு.D.S.மனோகரன் @ மோகன்.	3) திரு.M.மகேஸ்வரன்.
(அதன் பங்குதாரர்களால் குறிப்பிடப்பட்டது) SF.No.756/1, 2A,2B-திண்டுக்கல் பிளாக், சுப்புராமன் நகர் மேற்கு எல்லை, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்-624005.	S/o. D.V. சுப்புராமன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்] 44/24, மென்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.	S/o. திரு.D.S.மனோகரன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்], 44/24, மென்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உள்ளபடியே சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 24.03.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்., திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.1,08,45,659.58-ஐ (ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து அறுநூற்றி ஐம்பத்தொன்பது மற்றும் பைசா ஐம்பத்தெட்டு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 23.04.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார்/உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர்

சொத்து விபரம்:- இயந்திரங்களின் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

BOTTLE WASHER: Bottle Washer with 0.25HP Motor 2Nos. and accessories. **Movable Conveyor:** Movable roller conveyor with accessories. Width: 14", Length: 101" - 1No., Length: 220" - 1No. **R.O.PLANT: i) Sand Filter:** Sand filter made of 316SS material with accessories. **ii) Carbon Filter:** Sand filter made of 316SS material with accessories. **iii) High Pressure Pump:** Make: Grundfos, Capacity: 7.5KW. **iv) Micron Filter:** 5, 1 & 0.5 Micron filter with SS Pipeline, 4 filters, pressure vessels, membrane, chemical waste tank, recycling pump, UV lamp (bacteria cleaner) and all other accessories. **v) Ozonator:** Ozonator with CRI & Vacuum pump for both 10,000 litre storage tank. **vi) Storage Tank:** 10,000litre storage tank 2 Nos. made out of 316SS material with pipeline, valves and all other accessories. **FILLING SECTION: i) Manual Filling:** Manual Filling machine made out of 316SS material and all other accessories. **ii) Pouch Filling:** Pouch filling machine with all accessories. Capacity: 50Packs/Min. **iii) Tank:** 500 litre Tank made out of 316SS material with pumps, uv detector, oil micron filter and other accessories. iv) Heating Machine v)Bar Coding Machine **vi) Automatic Filling Machine:** Automatic filling machine with 0.1micron filter, pumps, motors, uv detector, conveyor, panel drives and all other accessories. **vii) Shrinking Machine:** Shrinking machine with 22KWmotor, conveyor, stand and with accessories. Model: BS-5540M **Compressor:** Mecco Compressor with 2HP motor and accessories. Capacity: 220Litre. 5KVA servo stabilizer with accessories. Bore well and sump tank with 3HP motor 2Nos. and accessories. **Air Conditioner:** Make: LG, Capacity: 1.5 Ton, Four wheel movable trolley. **Generator:** 82.5KVA KOEL make genset with Koel make engine and alternator, Battery, Panel, Fuel tank with acoustic enclosure, base mounting plate and all other accessories. **Engine Details:** Type: 4R1040 TA, S.No. 4H.3555/1220344, Year: 2012, Power: 105HP. **MICRO-BIOLOGICAL LAB:** Refrigerator: Make: Godrej, Capacity: 160Litres. Laminar Air Flow – 1No, Colony Counter – 1No, UV-Chamber – 1No, Micro Controller – 1No, Incubator – 4No, Balance Machine – 2No, Auto Clave – 2No, Hot woven Chamber – 1No, Hot Air oven – 1No, Digital Spectrometer – 1No, Magnetic Stirrer – 1No, PH Meter – 1No, TDS Meter – 1No, Heating Chamber - 1No, Digital Nephelometer – 1No, Steam Path Meter – 1No, Hot Plate – 1No, Distilled water equipments such as test, tubes, apparatus, trays, water heater, stands etc.,

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.27,46,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.2,74,600/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து அறுநூறு மட்டும்) EMD தொகை 22.04.2025 அன்றோ அதற்கு முன்பாகவோ 04:00 PM வரை செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	23.04.2025 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த விவரங்கள்	ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். Email Id: info@bankauctions.in என்ற இமெயில் மற்றும் https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம். சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட், 1) திரு.T.தினேஷ் (மொபைல் எண்.8056531536) அல்லது 2) திரு.R.அருண்குமார் (மொபைல் எண்.9894647220) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

Canara Bank
Syndicate

எ.ஆர்.எம் கிளை மதுரை

எச்சரிக்கை அறிவிப்பு

M/s.கனரா வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட கீழ்கண்ட சொத்துக்கள் கடன்தாரர் கடனை திருப்பிச் செலுத்த தவறியதனால் வங்கியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மேலும் வங்கிக்கு அடையான உடைமையாகவும் உள்ளன. எனவே எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனமோ இந்த சொத்துக்களை சொந்தமாகக் கொண்டு, விற்கவோ, ஆக்கிரமிக்கவோ அல்லது இதற்குரிய எந்தவொரு இடஒப்பந்தத்திற்கோ செல்ல முடியாது. இதை மீறி மேற்கொள்ளப்படும் எந்த செயலும் சட்ட விரோதமாக கருதப்படும் மற்றும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சொத்து விபரங்கள்:

1.தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி வட்டம், தேனி சார்பதிவு அலுவலகம், அல்லிநகரம் கிராமம், மனையடி அயன் சர்வே எண்: 274 மற்றும் புஞ்சை அயன் சர்வே எண்: 273/B3-ல் 1 ஏக்கர் 15¹⁶ சென்ட் (சர்வே எண்: 274-ல் 21¹⁶ சென்ட் + சர்வே எண்: 273/B3-ல் 94 சென்ட்)

நான்கு மால்: கிழக்கு: சர்வே எண்:273/B4 , **மேற்கு:** 20 அடி அகலமான வடக்கு - தெற்கு பாதை, **தெற்கு:** கிழக்கு - மேற்கு ராஜவைக்கால், **வடக்கு:** ரமில்வே நிலம். (சர்வே எண் 273/B3-ல் 4 சென்ட் பரப்பளவிலான கிணறு, 7.5HP மின்மோட்டார் பம்ப் செட்டும் அமைந்துள்ளது).

2: தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி வட்டம், தேனி சார்பதிவு அலுவலகம், அல்லிநகரம் கிராமம், மனையடி அயன் சர்வே எண்: 275/3 பரப்பளவு 548¹⁶ சதுர அடியிலான வீட்டு மனை.

நான்கு மால்: கிழக்கு: சர்வே எண்:274, **மேற்கு:** பாலமுருகன் மற்றும் திருஞானசம்பந்தம் ஆகியோரின் நிலம், **தெற்கு:** கிழக்கு - மேற்கு ராஜவைக்கால், **வடக்கு:** வடக்கு - தெற்கு 16 அடி அகலமான கிழக்கு - மேற்கு பொதுப்பாதை.

இந்த சொத்துக்களை வங்கியின் அனுமதி இல்லாமல் எந்தவொரு முறையிலும் வாங்குதல், விற்பனை செய்தல், அல்லது உரிமை கோருதல் போன்றவை சட்டவிரோதமாகும். இதை மீறி செயல்படுபவர்கள் மீது வங்கி கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

SG Sundaraj M.A.,B.L., Advocate,
No-18, Sornam Colony, Langaram Street, Thiru Nagar, Madurai-625005
தேதி: 25.03.2025

விவசாயிகளுக்கான கருத்தரங்கம்

உத்தமபாளையம், மார்ச் 25: உத்தமபாளையம் அருகே கோம்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தேனி மாவட்டம், கோம்பை இந்தியன் பொட்டாஷ் நிறுவன